புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
SACRED HEART COLLEGE (AUTONOMOUS) Tirupattur - 635 601 Tamil Nadu, India.
Vol:07, Issue: 03 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது: நவம்பர், 2023 – வெளியிடப்பட்டது: டிசம்பர், 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS December 2023 ISSN: 2456-821X

==========================================================================

# தமிழால் சமயங்களும் – சமயங்களால் தமிழும் வளர்ந்த நிலை

முதுமுனைவர் இரா.சங்கர்,
உதவிப்பேராசிரியர்,
முதுகலைத் தமிழ் & ஆய்வுத்துறை,
தூயநெஞ்சக் கல்லூரி (தன்னாட்சி),
திருப்பத்தூர்

==========================================================================

இரண்டாயிரம் ஆண்டு காலத் தமிழ் இலக்கியவரலாற்றின் வளர்ச்சி நிலையினை உற்று நோக்கினால், இலக்கிய வளர்ச்சியோடு சமய வளர்ச்சியும், சமயங்கள் ஆற்றியத் தமிழ்த்தொண்டினையும், சமயங்கள் ஏற்படுத்திய பூசலையும் ஆய்வு நோக்கில் உணர முடியும். அக வாழ்க்கை, புற வாழ்க்கையென வாழ்ந்த சங்ககாலத் தமிழரின் வாழ்வியலில் (சங்க இலக்கியத்தில்) சமயம் சார்ந்த கருத்தாடலைப் பெரும்பான்மையாகக் காண இயலாது. மாறாக இயற்கை வழிபாட்டையும், அச்சத்தின் வெளிப்பாட்டையுமே சமயங்களாக அல்லது சாமியாகக் காணமுடியும். இத்தகைய இயற்கையையொட்டி இயைந்து வாழ்ந்தத் தமிழனிடம் சமயங்கள் நிலைகொண்டத் தன்மையும், அதற்கான காரணத்தையும் உய்த்துணரும் வண்ணமாக இக்கட்டுரை அமைகிறது.

## சமயம்-கள்

சமயத்தில் உதவினான், சமயம் பார்த்துக் கழுத்தறுத்தான் என்பன போன்ற சொற்கள் சூழ்நிலையறிந்து உதவினான் அல்லது பழி தீர்த்தான் என்ற பொருண்மைகளில் தற்காலத்தில் பயன்படுத்துகிறோம். தக்க சமயத்தில் (சூழ் நிலையில்) தனக்கு அப்பாற்பட்ட சக்தி நம்மைக் காப்பதைத் தான் சமயங்கள் என்றுரைத்தார்களோ என்று எண்ணத்தோன்றுகிறது. அவ்வகையில் சூழல் அறிந்து காக்கும் அப்பாற்பட்ட சக்தி கால வளர்ச்சியில், இடச்சூழலுக்கு ஏற்பவும் விரிவடைந்து, உருவமற்ற வெற்றுவெளியையும், உருவமாக ஒளிதரும் பிறை நிலவையும், சூரியனையும் சமயத்தில் உதவும் பொருளாக வழிபடத்தொடங்கிய மக்கள், அச்சத்தின் வெளிப்பாடாய் விலங்குகளையும் வழிபட்டனர். இன்றுவரை வழிபட்டுக் கொண்டிருக்கின்றனர். அவ்வச்சத்தை ஏற்படுத்தும் விலங்குகளிடமிருந்த காத்த தன்னிகரில்லாதத் தலைவனைத் தம் குலம் காத்தவனாக குலதெய்வமாக வழிபட்டனர், வழிபடுகின்றனர். கால வளர்ச்சியும் மக்கள் தொகைப் பெருக்கமும் இனக்குழு சமூகத்தை உருவாக்கின. ஒவ்வொரு இனக்குழுவிலும் சிறப்புப் பெற்ற, இனக்குழுவைக் காத்தவர்கள் கடவுளர்களானார்கள். அப்படித் தோன்றிய கடவுளை முன்னிலைப் படுத்தி ஒட்டுமொத்த மக்களிடத்தே தங்களின் கடவுளைப் புகழ்ந்ததோடு, தங்களின் கடவுளுக்கென்று தனிக்கோட்பாட்டை உருவாக்கி, அகோட்பாட்டின் அடிப்படையில் அந்தந்த இனக்குழுவிற்கு நற்சிந்தனைகளை எடுதுரைக்க முற்படலானர்கள். அம்முயற்சியின் விளைவாக நற்கருத்துகளை நற்சிந்தனைகளை எடுத்துரைக்கும் பல கடவுளர்கள் தோன்றி, இனக்குழு சமூகத்திலிருந்து பொது சமூகமாக மாற்றம் அடையும்போது, தங்களுக்குள் உயர்ந்த சிந்தனைகளை உரைக்கும் சமயம் என்ற அடிப்படையில் இன்றைக்குச் சமயங்கள் தங்களின் சமயக் கடவுளையும்; அக்கடவுளின் கொள்கைகளான சமயச்சிந்தனைகளையும் எடுத்துரைக்கும் பாங்கில், மக்களுக்கு நற்கதி உய்க்கும் பாங்கில் உலகம்முழுவதும் சமயங்கள் பரவத்தொடங்கின. அதில் தமிழும் விதிவிலக்கல்ல, தமிழகத்திலும் பல சமயங்கள் பரவின. தமிழகத்தில் சமயச் சிந்தனைகளைப் பரப்புவதற்குச் சமயங்கள் பயன்படுத்திய உத்தி இலக்கியங்கள். பழந்தமிழரின் வாழ்வியல் கருவூலமாக விளங்கும் சங்க இலக்கிய காலம் தொட்டு தற்காலம் வரையிலான இலக்கியங்கள் மக்கள்

விரும்பும் அல்லது மக்களின் வாழ்வியலைப் புரிந்துகொள்வதற்கும் பயன்படும் ஞானப்பேலையாக இருக்கும் கருவி என்றுரைப்பது மிகையாகாது அவ்வகையில் தமிழரின் வரலாற்றை அறிய உதவும் இலக்கியங்கள் வழியாக சமயங்கள் வளர்ந்ததையும், சமய வளர்ச்சிக்காக சமய வாதிகள் கையாண்ட உத்திகளும் வழிநெடுகக் காணலாம்.

*பழந்தமிழரின் சமயச் சிந்தனைகள்*

பழந்தமிழரின் வாழ்வியல் சிந்தனையாக விளங்கும் சங்க இலக்கியத்தில் நெடுகத் தேடிப்பார்த்தாலும் தொல்காப்பியர் உரைத்த,

மாயோன் மேயக் காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேயாத் தீம்புனல் உலகமும்
வருணன் மேயப் பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென
சொல்லிய முறையான் சொல்லவும் படுமே[1]

என்ற முறைப்படி திருமால், முருகன், இந்திரன், வருணன் ஆகிய திணை நிலைக் கடவுளரும், இயற்கை வழிபாடும், மர வழிபாடும் பெண் தெய்வ வழிபாடும் தென்படுகின்றனவே அன்றி, மதம் சார்ந்த கருத்தாடல் காண இயலவில்லை. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பாக அன்பும் அறமுமென இருநிலை வாழ்வியலன்றி வேறு வாழ்வியலை அறிந்திடாத தமிழரிடத்து சமயம் என்று உள்ளே நுழைந்தது சங்கம் மருவியக் காலத்தில்தான்.

*சங்கம் மருவிய காலச் சமய நிலையும் தமிழும்*

தலைவன் தலைவியரின் காதல் வாழ்வும், வீரத்தைக் காட்டும் போர் நிகழ்வுமன்றி வேறொன்றும் அறிந்திடாத பழந்தமிழரிடத்து, அன்புநிலை இழிவானது, உயிர்பலிக் கூடாது என்று அறச்சிந்தனைகளோடு கி,பி 2 ஆம் நூற்றாண்டிற்குப் பிற தமிழ்ச்சமூகத்தில் நுழைந்தது சமண சமயமும், பௌத்த சமயமும்.

வேட்டையாடி வீரத்தைக் காட்டி வாழ்ந்த பழங்தமிழருக்கு "ஊனைத்தின்று ஊனைப் பெருக்காதே[2]" என்ற போதனைகளும்; அறத்தின் அடிப்படையில் பொருளை ஈட்டி இன்பமாக வாழ்ந்து வீடுபேறடைவது சிறப்பானது என்ற சிந்தனைகளும் உணர்த்துவதற்காக பதினெண்கீழ்க்கணக்கு இலக்கியங்களும், பல இலக்கண நூல்களும் சமண, பௌத்த சமயத்தாரால் தோன்றின. அன்பும் வீரமும் மட்டுமே வாழ்க்கையென்றிருந்த தமிழரிடத்து வடக்கிருந்து வந்த புத்தர், மாகாவீரரின் சமய போதனைகளோடு தமிழும் இலக்கிய வளமையை உயர்த்திக் கொண்டது. தமிழரின் மணி மகுடமாக சங்க இலக்கியம் விளங்கினால், அதனை அழகு சேர்க்கும் முதல் மணியாக சமண, பௌத்த இலக்கியங்கள் வளர்ந்தன. காலப் போக்கில் அச்சமயங்களில் உள்ள குறைபாடுகளாக, திகம்பர நிலையும்ன் (ஆடையற்ற நிலை), இளமையில் துறவு போதலும் அதற்கு அடுத்த நிலையிலிருந்த சமயங்களான சைவமும், வைணவமும் மேற்குறிப்பிட்ட குறைபாடுகளை கையில் எடுத்துக்கொண்டு, சங்க கால மக்களிடம் இருந்த குறைபாடுகளைச் சுட்டிக்காட்டி சமணமும் பௌத்தமும் வளர்ந்ததைப் போன்று தங்களின் சமயங்களை வளர்க்கலாயினர். அதன் அடிப்படையாக பல பூசல்கள் அனல் வாதம் புனல் வாதம் என்ற அடிப்படையில் பல பக்தி இலக்கியங்கள் தோன்றின பக்தி இலக்கியம் என்றபெயரில் தமிழ் தளைத்தோங்கியது.

*சைவம், வைணவமும் தமிழும்*

சமண சமயத்தை முதன்மைப் படுத்தி ஆட்சி செய்துகொண்டிருந்த பல்லவ அரசர்களிடம் வாதம் செய்து வென்ற அப்பர் போன்ற சைவ அடியார்களும், வைணவத்தை முதன்மை படுத்திய ஆழ்வார்களும், காலப்போக்கில் தங்களுக்குள்ளாகப் பூசல் ஏற்பட்டு முதன்மையானது சைவமா? வைணவமா? என்ற அதிகாரப்போக்கு விரிவடையவே, சைவ சமயத்தை வளர்க்கும் நோக்குடம் பன்னிரு திருமுறைகளும்; வைணவத்தை வளர்க்கும் விதமாக நாலாயிரதிவ்விய பிரபந்தங்களும் தோன்றலாயின. வடக்கிருந்து வந்த சமணத்தையும் பௌத்தத்தையும் விரட்டியடித்த இவ்விரு மதங்களுக்கிடையே ஏற்பட்ட பூசல் பல்லவர் காலத்தில் தொடங்கி பிற்காலச் சோழர்காலத்தில் உச்சத்தை எட்டி, தற்காலம் வரையிலும் நீரு பூத்த நெருப்பாக நிலைத்து நின்றிருக்கிறது. இவ்விரு

*சமயங்களால் இன்னல் பல நேர்ந்திருந்தாலும் பல அற்புதமான பக்தி இலக்கியங்கள் தோன்றி தமிழ் இலக்கிய வரலாற்றில் முக்கியமான இடத்தினைப் பிடித்திருக்கிறது*

*பிற்காலச் சமய இலக்கியங்கள்*

*சங்க காலம் முதலாக தமிழரின் வரலாற்றை இலக்கியத்தின் வழியாக அறிந்த பிற நாட்டினர், மொழியினர், பிற மத்தத்தினர் தமிழகத்தில் நுழைவதற்கு முன்பாகவே தமிழ் இலக்கியங்களைக் கற்றுத்தேர்ந்து தமிழகத்திற்குள் நுழைந்தவுடன் தமிழுக்கு இலக்கியத்தொண்டாற்ற முற்பட்டிருக்கின்றனர். அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் இஸ்லாமியரும், கிறித்துவர்களும். இவ்விரு சமயங்களும் தங்களின் மதபோதனைகளை மக்களிடம் கொண்டு செல்வதற்குச் செய்த முதல் முன்னெடுப்பு இலக்கியம்தான். தமிழன் இலக்கியத்தின் வழிவந்தவன் என்பதனை உணரும் ஒவ்வொரு மதத்தினரும் இலக்கியங்களைக் கொண்டு மதக்கருத்துகளை எழுதினாலும் அது அற்புத இலக்கியங்களாக தமிழ்மொழி மாற்றி விடுகிறது. இதன் அடிப்படையில் இன்றைக்கு ஏராலமான இஸ்லாமிய, கிறித்துவ இலக்கியங்கள் தோன்றி தமிழ்மொழியின் வளர்ச்சிக்கு வித்திட்ட வண்ணமே இருக்கின்றனர்.*

*முடிவுரை*

*தமிழ்மொழி தனித்தன்மை வாய்ந்தது ஆனால், தமிழ்மொழியைத் தனித்த என்று உரைத்து விடமுடியாது. ஏனெனில், பல்வேறு சமயங்களின் கூட்டமைவு. அதனைப்போன்றே, பல்வேறு சமயத்தார் வாழ்கின்ற ஒருங்கிணைந்த நாடு. தமிழ் மொழி உலகமெங்கும் பரவிட பல்வேறு மதங்கள் தொண்டாற்றி இருக்கின்றன. தமிழ்கத்தில் பல மதங்கள் தோன்றி வளர்வதற்கு தமிழ் இலக்கியங்கள் பயன்பட்டன, தமிழ் இலக்கியங்கள் பல்வேறு பரிணாமங்களை எட்டுவதற்கு பல்வேறு மதங்கள் துணைநின்றன. ஆகையால், தமிழால் மதங்களும் – மதங்களால் தமிழும் வளர்ந்ததுதான் தமிழின் பெருமை.*

*துணை நின்ற நூல்கள்*

1. *தொல்காப்பியம் (இளம்பூரணர் உரை), சாரதா பதிப்பகம் – சென்னை.*
2. *தமிழ் இலக்கிய வரலாறு, மது ச. விமலானந்தம், பாரி நிலையம், சென்னை -104*
3. *நானாற்பது – தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம் – சென்னை*
4. *அறம் – அதிகாரம், ராஜ் கௌதமன்,, புதுவை*

********* ********* ********** ********* ********* ********** ********** **********